பரிசுத்த பவுல் ஆலயம் – குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



HAPPY NEW YEAR

மாத இதழ்

# 2014

ஜனுவரி

இதழ் : 9

மலர் 14

# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்




யோவா. 8:32

# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! தேவனுடைய பெரிதான கிருபையினால் 2014 –ம் வருடத்தின் முதல் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு கிருபையாய் தந்திருக்கிறார். கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். புதிய வருடத்தில் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் புதிய எதிர்பார்ப்போடு இருப்பதை தேவன் அறிவார். கடந்த வருடம் முழுவதும் நம்மை நடத்தி வந்த தேவன்: பாவ வாழ்க்கையிலிருந்து ஜெயம் தந்த தேவன் இந்த புதிய வருடத்திலும் நம்மை விடுதலையாக்கும்படி நம்மோடு இருக்கிறார். **"சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"** (யோவா. 8:32) என்ற வசனத்தின்படி நம்மை கர்த்தர் நடத்துவாராக. நாம் சத்தியத்தை அறியும் போது கீழ்க்கண்ட காரியங்களிலிருந்து நம்மை விடுதலையாக்குவார்.

1. எல்லாவித தேவையில்லாத பயத்திலிருந்து விடுதலை
2. நியாயப்பிரமாணம் அல்லது சட்டங்களிலிருந்து விடுதலை
3. பாரம்பரியங்களிலிருந்து விடுதலை
4. பாவத்திலிருந்து விடுதலை
5. உலக மயக்கத்திலிருந்து விடுதலை
6. சுயத்திலிருந்து விடுதலை

ஒருவேளை நம்முடைய கவலையெல்லாம் நம்முடைய பிரச்சனைகளிலிருந்து விடுதலை கிடைக்காதா! என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். நமக்கு இருக்கும் பிரச்சனையான... கடன் பிரச்சனை, குடும்ப பிரச்சனை இப்படிப்பட்ட பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுதலை பண்ணுவது லேசான காரியம். இப்படிப்பட்ட பிரச்சனைகளிலிருந்து மனிதன்கூட நம்மை விடுவிக்க முடியும். ஆனால் நம்மீது அன்பு செலுத்த நம்முடைய குமாரனாகிய இயேசுவை பலியாக தந்தவர் விரும்புவது எல்லாம் நாம் முற்றிலுமாக அவருக்கு சொந்தமானவர்களாய் மாறவேண்டும். அதற்காகவே விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தியிருக்கிறார். எதற்கும் அடிமையாகாமல் முற்றிலும் இயேசுவை போல் விடுதலை பண்ணப்பட்டவர்களாய் இருக்க விரும்புகிறார். அதற்கு நாம் சத்தியத்தை அறியும் போது நம்மைக் குறித்து, நமது நோக்கம் குறித்து, நமது விடுதலை குறித்து அறிய முடியும். நாம் எதற்காக உண்டாக்கப்பட்டோம்! நமது முடிவு எப்படி இருக்கவேண்டும்! என்று ஒரு கண்ணாடி போல் நம்மைக் குறித்து அறிய முடியும். எனக்கு பிரியமானவர்களே! உலகத்தில் நடக்கிற காரியங்களை பார்க்கும் போது இயேசு கிறிஸ்துவின் வருகை வெகு சீக்கிரம் இருக்கிறது. அதற்காக வேக வேகமாக மனந்திரும்புங்கள் என்று மாத்திரம் நமது அழைப்பு இல்லை. நாம் செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு. இயேசுவை பிரதிபலிப்பவர்களாய் தேவ சித்தம் செய்ய தீர்மானம் பண்ணுவோம். தேவ சித்தம் செய்ய முடியாமல் நம்மை தடுப்பது நம்மில் உள்ள பாவம், சுயம், பாரம்பரியம், பயம், சட்டங்கள், உலகத்தால் உண்டாகும் மயக்கங்கள்

கர்த்தாவே; நீர் எங்கள் பிதாவும்; எங்கள் மீட்பருமாயிருக்கிறீர்: –ஏசா. 63:16

இதில் ஒன்றிலிருந்து விடுதலை இல்லையென்றால் கூட நாம் தேவ சித்தம் செய்ய முடியாது. எந்த காரியத்தில் நாம் விடுதலை பெறமுடியாமல் தவிக்கிறோம்! குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். குமாரனாகிய இயேசு பரிசுத்த ஆவியானவரை அனுப்பி இருக்கிறார். அவர் வந்து உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்: விடுதலை தருவார். நமக்கு இது ஒரு விடுதலையின் ஆண்டு. தேவன் தாமே நம்மை விடுதலையாக்கி ஆசீர்வதிப்பாராக. இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை சபையின் செயற்குழு மற்றும் குடும்பத்தின் சார்பாக கூறி வாழ்த்துகிறேன்.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**



## பதில் சொல்லுங்க

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. அலங்கம் எத்தனை நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டது?
2. எஸ்றா எந்த காரணத்திற்காக உபவாசத்தைக் கூறினான்?
3. மொர்தெகாய் எஸ்தருக்கு திரும்பவும் சொல்லச் சொன்னது என்ன?
4. உன்னை எகிப்திலிருந்து கொண்டு வந்த தெய்வம் இதுவென்று எதை குறிப்பிட்டார்கள்?
5. எஸ்தருக்கு எதினால் யேகாயின் கண்களில் தயை கிடைத்தது?
6. மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவித்தவர்கள் யார்?
7. எதனால் இஸ்ரவேலின் மேலிருந்த குற்றத்தை அதிகரிக்கப்பண்ணினார்கள்?
8. எஸ்தர் ராஜாவுக்கு எத்தனை முறை விருந்து வைத்தாள்?
9. எஸ்றா சகல ஜனங்களுக்கு முன்பாக புஸ்தகத்தை திறந்தபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?
10. கர்த்தருடைய ஆலயத்திற்காக கோரேஸ் ராஜா கொடுத்த ஆலய பணிமுட்டுகள் எத்தனை?
11. மறு ஜாதியான ஸ்திரீகளால் பாவம் செய்தவன் யார்?
12. சூசான் அரண்மனையில் நடந்த விருந்தில் எதினால் பானம் கொடுக்கப்பட்டது?
13. ஆட்டு வாசலை கட்டியது யார்?
14. ஆமான் மொர்தெகாயை விரோதித்ததற்குண்டான காரணம் என்ன?
15. எருசலேமிலுள்ள தேவனுடை ஆலயத்தின் அஸ்திபாரத்தை போட்டது யார்?

குறிப்பு:- வேதாகமத்தில்... எஸ்றா, நெகேமியா மற்றும் எஸ்தர் ஆகிய புத்தகங்களில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வருகிற 24-01-2014 -ம் தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 97224276

மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும்; உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்: ஏசா. 64:5

## சத்தியம்

சத்தியம் என்பதன் சரியான அர்த்தம் உண்மை என்பது ஆகும். ஆனால் இந்நாட்களில் உண்மையை இந்த உலகத்தில் காண்பது மிகவும் அரிதாக உள்ளது. உண்மையான நண்பர்கள், உண்மையான மனைவி, உண்மையான கணவன், உண்மையான பிள்ளைகள், உண்மையான சமுதாயம், உண்மையான உறவுகள், உண்மையான உலகத்தை காண்பது மிக மிக அரிதான ஒன்றாகவே உள்ளது. எங்கும் வாழ்க்கையிலே ஏமாந்து போனவர்களே அதிகமாக காணப்படுகிறார்கள்.

பிரியமானவர்களே! நாம் ஒரு காரியத்தை தெரிந்து கொள்ள வேண்டும். நம் தேவன் உண்மையுள்ளவர். அல்லேலூயா! வேதம் கூறுகிறது, "நீங்கள் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் (கர்த்தர்) உண்மையுள்ளவராயிருக்கிறார்" என்று. அந்த சத்திய தேவன் நமக்கு தகப்பனாக இருக்கிறபடியால் எதைப்பற்றியும் கவலைப்படாதிருங்கள். அவர் உங்களை சத்தியத்தின் பாதையில் நடத்துவார். ஆமென்: உண்மையில்லாத உலகத்தில் கர்த்தர் உங்களை சகல தீமைகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்வார். "உன்னத தேவனே உங்களுக்கு அடைக்கலம் அவர் நித்திய புயங்களே உங்களுக்கு ஆதாரம்" **"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்"** (யோவா. 14:6) "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா. 8:32) என்று உரைத்த அருள்நாதரின் வாக்குகள் உங்களை சகல சத்தியத்திற்குள் நடத்தும். பிதா தரும் சத்தியம் "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் நீதியும் சமாதான மும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும். **"சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும் நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்"** (சங். 85:10,11). இந்த வசனம் பிதா, இந்த உலகத்திலே மனிதனாக அவதரித்து சத்தியத்தை இந்த உலகத்திலே நிலைநாட்டுவார் என தாவீது தீர்க்கதரிசனமாக கூறின செய்தியை தெரிவிக்கிறது.

மனிதனை வஞ்சித்த சத்துருவாகிய பிசாசு மனுக்குலத்தை கெடுத்துப்போட்டான். அதனால்தான் உலகத்திலே எங்கு பார்த்தாலும் பொய்களும் அக்கிரமங்களும் காணப்படுகிறது. பிசாசைக் குறித்து வேதம் சொல்கிறது **"திருடன் திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி, வேறொன்றுக்கும் வரான். அவன் பொய்யன் அவன் பொய்க்கு பிதா"** (யோவா. 10:10) என்று. அதனால்தான் உலகத்தில் உபத்திரவங்கள், சண்டைகள், நோய்கள், துரோகங்கள், பொய்கள், சாபங்கள், கோபங்கள், வைராக்கியங்கள், ஏமாற்றுக்காரியங்கள், லஞ்ச லாவண்யங்கள், கொலைகள், வெறிகள், வேதனைகள், போன்ற அக்கிரமங்கள் மலிந்து காணப்படுகிறது. பண முதலீடு நிறுவனங்களில் பணத்தை போட்ட வயோதிகர்கள் ஏமாற்றப்படுவது தற்போது வாடிக்கையாகிவிட்டது. எங்கும் உண்மையில்லை. போலியான விளம்பரங்கள் மக்கள் வாழ்க்கையை சீரழித்துக்கொண்டிருக்கிறது. சினிமா கவர்ச்சிகள் தற்போது மனிதர் களை கெடுத்து நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து மனிதனை விடுவிப்பதற்காகவே கர்த்தர் இயேசு என்ற பெயரில் இந்த உலகத்தில் மனித னாக அவதரித்தார். இதைத்தான் இயேசு கிறிஸ்து "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் (யோவா. 14:11) நான் தனித்திரேன் பிதா என்னுடனே கூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்கு சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவா: 16:33) என்றார். அல்லேலூயா! பிதாவின் கிருபையும் நீதியும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும்,

ஆலோசனையும், பெலனும், அதிகாரங்களும், வல்லமையும், வரங்களும், அற்புதங்களும் அதிசயங்களும் உங்களை சகல இக்கட்டுகளிலிருந்தும் நிச்சயமாகவே பாதுகாக்கும். மனம் கலங்காதிருங்கள்! குமாரன் தரும் சத்தியம் ஆதி மகிமையை இழந்த மனுக்குலத்தை இரட்சிக்கும்படியாக இயேசு என்ற பெயரில் தேவகுமாரன் பிறந்தார். ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிருந்தது. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது: அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது: அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவா. 1:1-9).

ஆம் இயேசு கிறிஸ்து சிலுவையில் நமக்காக சிந்தின இரத்தமே நம்மை இந்த பாவ உலகத்தின் அக்கிரமங்களிலிருந்து விடுவிக்கிறது. பாவ பரிகாரியாக, மனிதனை மீட்டெடுக்கும் ஒளியாக, சிலுவையில் தன் இரத்தத்தை கடவுள் சிந்தினதினாலே பொய்களிலிருந்து மீட்பை மனிதன் பெற்றுக்கொள்ளுகிறான். இயேசுவின் இரத்தத்தினால் மனிதன் கழுவப்படுவதினால் மறுபிறப்பு அல்லது மனம் திரும்புதல் மனிதனுக்கு சாத்தியமானது. இயேசு கிறிஸ்துவின் மகிமையான உயிர்த்தெழுதல் சத்தியம், இந்த பூமியில் இன்னும் சாகவில்லை என்ற ஆறுதலை நமக்கு தருகிறது. பிரியமானவர்களே! நீதியும், சத்தியமும் இந்த உலகத்தில் இன்னமும் நமமோடுகூட வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. நாம் மனம் திருந்தின பிள்ளைகளாய் இயேசுவுக்கு உண்மையுள்ள சாட்சிகளாய் வாழ்வதின் மூலம் இந்த உலகத்தில் சத்தியத்தை நிலை நாட்டமுடியும். இதைத்தான் இயேசு கிறிஸ்து **"நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்கு தந்த மகிமையை நான் அவர்களுக்கு கொடுத்தேன்"**. (யோவா. 17:22) என்று கூறினார். பரிசுத்த ஆவி தரும் விடுதலை மனிதனாக வாழ்ந்து மரித்து உயிர்த்த கடவுள் பரமேறி சென்றபோது நம்மை வெறுமனே விட்டு செல்லவில்லை. பரிசுத்த ஆவியை நம்மிடத்தில் விட்டு சென்றிருக்கிறார். அல்லேலூயா! சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினாலே என்னை மகிமைப்படுத்துவார் (யோவா. 16:13,14). இந்த உலகத்தில் சத்தியம் இல்லையே என கலங்கி நிற்காமல் நாமே சத்தியமாக மாறவேண்டும். நம்மை அவர் தனது சொந்த இரத்த கிரயத்தால் வாங்கியிருப்பதால் நாம் இயேசுவின் பிரதிநிதிகளாக இந்த உலகத்தில் வாழவேண்டும். **"நான் உங்களை திக்கற்றவர்களாய் விடேன். உங்களிடத்தில் வருவேன்"** (யோவா. 14:18) என்று சொன்ன அருள்நாதர் தமது இரண்டாம் வருகையில் திரும்ப வருகிற வரைக்கும் சத்தியத்தை இந்த உலகத்தில் நிலை நாட்டும்படியாய் தேவன் நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார். எத்தனை சந்தோஷம்!

ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் செய்து, உண்மையான மாசற்ற அன்பை மற்றவர்களுக்கு காண்பித்து, கடவுள் நமக்கு ஈவாக கொடுத்த விடுதலையை மறக்காமல் மற்றவர்களும் அறியும்படி எடுத்துரைத்து, உலக மக்கள் அனைவரையும் இந்த விடுதலையின் வாழ்விற்கு நேராய் வழி நடத்துவோமா? உன்னிடத்தில் நீ அன்பாயிருக்கிறது போல பிறனிடத்திலும் அன்பாய் இரு என இயேசு சொல்லி சென்றாரே அந்த அன்பை மற்றவர்களுக்கு காண்பிப்போமா? ஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்து, பசித்த மக்களுக்கு ஆகாரம் கொடுத்து, உலகத்தால் வெறுத்து

தள்ளப்பட்டு வாழவே வழியில்லாதவர்களுக்கு ஆறுதலும், அடைக்கலமும் கொடுத்து கிறிஸ்துவின் அன்பை காண்பிப்போமா? பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரை பெற்றுக் கொள்ள மாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவா. 14:17). அன்னை தெரசா ஜெபித்ததுபோல "ஆண்டவரே, இருள் உள்ள இடத்தில் வெளிச்சமாக இருக்கவும், சண்டை சச்சரவுகள் உள்ள இடத்தில் நான் சமாதானத்தை விதைக்கவும், வெறுப்புள்ள இடத்தில் நான் அன்பை காண்பிக்கவும், குழப்பமுள்ள இடத்தில் நான் ஆறுதல் தரவும் என்னை பெலப்படுத்தும்" என ஜெபிப்போமா? இந்த புதிய வருஷத்திலே நல்ல புதிய தீர்மானங்களை எடுப்போம். இந்த உலகத்தில் சத்தியம் இல்லை என கவலைப்பட்டு கலங்குவதைவிட சத்திய ஆவியை பெற்றிருக்கின்ற நாம் தினமும் வேத வசனங்களை தியானித்து சத்தியத்தின் பாதைகளை இந்த உலகத்தில் மற்றவர்களுக்கு காண்பிப்போம். **"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்"** (யோவா. 14:23). சத்தியத்தை குறித்து சாட்சி சொல்ல இந்த உலகத்தில் பிறந்தேன்.

சத்தியவான் எவனும் என் சத்தத்தை கேட்கிறான் என்று சொன்ன பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு சகல ஆறுதலையும், நம்பிக்கையையும் தந்து இந்த உலகத்தில் சாட்சிகளாக வாழ வழி செய்வாராக!

**கர்த்தரின் பணியில்**
**சகோ. ஸ்டாலின்**

---



## டிசம்பர் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பிரியா பிரேம்குமார்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. மரகதம் ஸ்டீபன்
Bro. இம்மானுவேல்
Bro. லாசர்
Bro. ஜாண்
Sis. செலின் டேவிட்
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. ஜோன் ஆப் ஆர்க் அசோக்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. பிரிஸ்கில்லா செங்குட்டுவன்
Bro. ஜாண்சன்
Bro. ஆல்பர்ட்
Bro. தர்மர்

---

## சிரி.... சிந்தி

**நீ மேலே உயரும் போது நீ யார் என்று நண்பர்கள் அறிவார்கள். நீ கீழே இறங்கும் போது உண்மையான நண்பர்கள் யார் என்று நீ அறிவாய்.**

**– அஹமதி தமிழ் திருச்சபை**

அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்:
உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். _எரே. 1:19

# வாழ்த்துகிறோம் வளர்ந்திடவே




பிறந்தது ஓர் புத்தாண்டு
பறந்திடவே பழைய ஆண்டு
சென்ற ஆண்டில் காத்திட்டார் கண்மணி போல்
கரம் பிடித்திட்டார் மணமகன் போல்
போஷித்தார் தாயைப் போல்
சுமந்திட்டார் தந்தையைப் போல்
முன்நடந்திட்டார் நல்ஆயனைப் போல்
தந்திட்டார் சுகம் மருத்துவர் போல்
என்னவென்று கூறிடுவேன் அவர் தயவை
ஸ்தோத்திரம் பல செலுத்திடுவேன் தினம் தினமே!
கனிதருமோ கொடி தனித்திருக்க!
கனிசுவையோதனி இயேசுவில் நிலைத்திருக்க
ஒளி தருமோ விளக்கு மறைந்திருக்க
மறைந்திடுமோ அது (கன்)மலைமேலிருக்க!
உதிக்கட்டும் எம்முள் புது நம்பிக்கை
மறையட்டும் அறவே துர்இச்சை
கனியட்டும் தேவ அன்பு எம்மில்
காய்ந்தொழியட்டும் கசப்பு உள்ளில்.
ஊறட்டுமே புது ஊற்று எம்மில் –அது
பாயட்டுமே பயன் பலர் பெற்றிடவே
உயர்த்திடுவோம் இயேசு நாமத்தையே
சிரம்தனையே அவர் முன் தாழ்த்திடு
தொனித்திடுமே எக்காளம் வானில்
நாமும் பறந்திடுவோம் மறுரூபமாகி
சேர்ந்திடுவோம் இயேசுவோடுகூடி
பணிந்துகொண்டே புதுப் பாட்டைப்பாடி.
வாழ்த்துகிறோம் உம் அனைவரையும்
பிறந்திட்ட இந்த புத்தாண்டில்
வளர்ந்திடுக கிறிஸ்தேசுவில் இன்னும்
சுகித்திருந்தே தேகத்தில் என்றும்!!

Sis. **பிரியா பிரேம்குமார்**

## ANSWER FOR THE QUIZ (December)

| Across | | Down | |
|---|---|---|---|
| 1. Holy Spirit. | Luk. 1:15 | 6. Jesus. | Luk. 5:24 |
| 2. Gabriel. | Luk. 1:31 | 7. Adam. | Luk. 3:38 |
| 3. Word. | Luk. 4:4 | 8. Christ. | Luk. 4:41 |
| 4. Satan. | Luk. 4:8 | 9. Repentance. | Luk. 3:8 |
| 5. Gabriel. | Luk. 1:37 | | |

# பொன் (வசனம்) வீச்சு

## வார்த்தை

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்: அவருடைய மகிமை யைக் கண்டோம்: அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமை யாகவே இருந்தது (யோவா. 1:1,14).

அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனு டைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத். 4:4).

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் (சங். 119:11).

நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள் (யோவா. 15:3).

உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும் (சங். 119:130).

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2தீமோ. 2:15).

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுற மும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவி யையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபி. 4:12).

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது: நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோவா. 6:63).

வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை (மத். 24:35).

சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறா மைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1பேது. 2:2-3).

---

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க** விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் - போன்: 50659288

சீர்கெட்ட பிள்ளைகளே; திரும்புங்கள்: உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் என்றார். எரே. 3:22


# வித்தியாசம் எது!




13 போய் 14 வருகிறது
இரண்டிற்கும் என்ன வித்தியாசம்!
ஆயுசில் வித்தியாசம் எதுவும் இல்லை.
இரண்டும் 365 நாட்கள் தான்.
பின் வித்தியாசம் எங்கே இருக்கிறது?
அது நம் கையில்தான் இருக்கிறது.
நேரத்தை எப்படி செலவு செய்கிறோம்
என்பதில்தான் இருக்கிறது.
ஜெபத்திற்கு கொடுக்கும் நேரம்
வேத தியானத்திற்கு கொடுக்கும் நேரம்
ஆலய கூடுகைக்கு கொடுக்கும் நேரம்
தேவ ஊழியத்திற்கு கொடுக்கும் நேரம்
13 –ஐ விட 14 –ல்
அதிகமாய் இருக்குமென்றால்
நிச்சயம் 14 ஒரு வித்தியாசமான ஆண்டு
காட்டிடு வித்தியாசத்தை
தேவனுக்கு கொடுப்பதில்!
பெற்றிடு ஆசீர்வாதத்தை
அதுவே தேவன் தரும் பதில்.

- Sis. **லதா கிறிஸ்டோபர்**

## டிசம்பர் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்



| | | |
|---|---|---|
| 1. | ராஜாதிபத்தியம் | 1நாளா. 5:2 |
| 2. | அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர் மலை தேசத்தார். | 2நாளா 20:22 |
| 3. | கர்த்தர். | 1நாளா. 18:13 |
| 4. | 4000 | 2நாளா 9:25 |
| 5. | 5 பேர். ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபீதா, எல்தாகா. | 1நாளா. 1:33 |
| 6. | சிதேக்கியா. | 2நாளா 36:11 |
| 7. | 25 –ம் வயதில் ராஜாவானான். 29 வருடம் அரசாண்டான். | 2நாளா 29:1 |
| 8. | இஸ்ரவேலை தொகையிடுகிறதற்கு ஏவிவிட்டது. | 1நாளா. 21:1 |
| 9. | மூன்று மாதம். | 1நாளா. 13:14 |
| 10. | மோரியா. | 2நாளா 3:1 |
| 11. | கில்போவா மலை. | 1நாளா. 10:8 |
| 12. | யூதா. | 2நாளா. 9:31 |
| 13. | சவுலின் குமாரத்தியாகிய மீகாள். | 1நாளா. 15:29 |
| 14. | பொன் கன்றுக்குட்டிகள். | 2நாளா. 13:8 |
| 15. | 1நாளாகமம். 16:34 | |

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
- செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
- செல்வி. சுஜானா லென்சிபாய்
- செல்வி. ஜாய் சுஹிலின் ஜாய்சன்
- செல்வி. ஏஞ்சலின் அஜிதா மனோகரன்
- செல்வி. ஷெரின் பெனிற்றா ஸ்டாலின்
- செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
- செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்
- செல்வி. அன்ஷிகா ஸ்டீபன்
- செல்வன். எட்வின் ராஜ்
- செல்வன். கிஃப்டி ஆல்பிரட்
- சகோதரி. சுசீலா லாசர்
- சகோதரி. சான்ட்ரா கோமஸ்
- சகோதரி. லைலா ஆல்பிரட்
- சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
- சகோதரி. சுமதி ஐசக் துரை
- சகோதரி. கில்டா பால் பாண்டியராஜ்
- சகோதரி. கிறிஸ்டீனா ஃபிராங்
- சகோதரி. விக்டோரியா ராஜன்
- சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
- சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
- சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
- சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
- சகோ. ஃபிரடரிக் செல்வராஜ்
- சகோ. ஐசக்துரை
- சகோ. வேதநாயகம் ஜஸ்டஸ்
- சகோ. ஸ்டான்லி பிரேம்குமார்
- சகோ. செங்குட்டுவன்
- சகோ. ஆரோக்கியராஜ்
- சகோ. செல்வதாஸ்
- சகோ. ஸ்ரீனிவாசன் ராகவன்
- சகோ. தங்கராஜ் ஆல்பஸ் ஜேம்ஸ்




# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. தம்புகுமார் டென்னிஸ்
- திருமதி & திரு. வில்கின்ஸ் தினகரன்
- திருமதி & திரு. சாம் ஆனந்த்
- திருமதி & திரு. ஜஸ்டின் சுந்தரராஜ்
- திருமதி & திரு. ராஜா செல்வன்
- திருமதி & திரு. செல்வதாஸ்
- திருமதி & திரு. சாமுவேல்
- திருமதி & திரு. இயேசுரெத்தினம்
- திருமதி & திரு. ஜீவா
- திருமதி & திரு. வேளாங்கண்ணி



கர்த்தாவே; உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றது. -எரே. 5:3

அவர்களைக் குணமாக்கி; அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன். -எரே. 33:6

# ஜனவரி 2014 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 05-01-2014 | **சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ்** | **சகோ. ஜசக்துரை** |
| 12-01-2014 | **சகோ. ஸ்டாலின்** | **சகோ. சுகுமார்** |
| 19-01-2014 | **சகோ. அற்புதராஜ்** | **சகோ. அசோக்குமார்** |
| 26-01-2014 | **சகோ. விசு** | **சகோ. ஸ்டாலின்** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 03-01-2014 | **சகோ. வில்சன்** | **சகோ. ரவிச்சந்திரன்** |
| 10-01-2014 | **சகோ. ஜெயசேகர்** | **சகோ. ஜெகநாதன்** |
| 17-01-2014 | **உபவாச திருவிருந்து ஆராதனை** | |
| 24-01-2014 | **சகோ. டேவிட்குமார்** | **சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்** |
| 31-01-2014 | **குடும்ப ஆராதனை** | |

01-01-2014 **புதுவருட ஆராதனை** 5.00 pm to 6.30 pm

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 01-01-2014 | **சகோ. எபெநேசர்** | **சகோ. கிறிஸ்டோபர்** |

சங்கிலி தொடர் ஜெபம்: 02-01-2014 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 09-01-2014 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை

---

வாலிபர் கூடுகை: 31.1.2014, சபை இல்லம், ஃபாஹறாகீல்.

பெண்கள் கூடுகை: 22.1.2014, Sis. அனுபா டேனியேல் இல்லம், ஃபாஹறாகீல்.

# ஆத்துமமே

**"ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்"** (நீதி. 11:30). கேத்தரின் அம்மையார் அமெரிக்க தேசத்தில் பள்ளி ஆசிரியையாக வேலை செய்து வந்தார். தான் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு தன் திருச்சபையின் ஆலயத்தின் போதகரை அணுகி, தன்னை மாணவர்களுக்கு வேதத்தை போதிக்கும் ஆசிரியராக நியமிக்குமாறு வேண்டிக் கொண்டார். ஆனால் போதகர் அதற்கு மறுப்பு தெரிவித்ததனால் மன வேதனையோடு வீடு வந்து சேர்ந்தார். அடுத்தநாள் சாயங்கால வேளையில் வீட்டின் அருகில் உள்ள ரோஜா பண்ணையில் செடிகளை பராமரிக்கும் வேலையை செய்து கொண்டிருந்தார்.

இதை ஆவலோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு சீன மாணவனை கேத்தரின் அம்மையார் கவனித்தார். பின்பு அந்த சீன மாணவனை அன்போடு தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தேநீர் கொடுத்து உபசரித்தார். அதை தொடர்ந்து இயேசு இந்த உலகில் வந்தது குறித்தும், அவர் நமக்காக மரித்து நமக்கு இரட்சிப்பை உண்டுபண்ணினதைக் குறித்தும் அந்த சீன மாணவனுக்கு எடுத்துரைத்து அனுப்பிவிட்டார். மறுநாள் சாயங்கால வேளையில் அந்த சீன மாணவன் வேறு ஒரு மாணவனுடன் மீண்டும் கேத்தரின் அம்மையாரின் வீட்டிற்கு வந்தான். இன்றும் இருவருக்கும் இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் அவரின் மகத்துவத்தையும் கேத்தரின் அம்மையார் எடுத்துக் கூறினார். இருவரையும் இயேசுவின் அன்பு வெகுவாய் ஈர்த்தது. இருவருமே இயேசுவை தங்கள் இரட்சகராக தேவனாக ஏற்றுக் கொண்டார்கள். கேத்தரின் அம்மையார் இந்த பணியை தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தினார்.

மாதங்கள் சில கடந்தன: கேத்தரின் அம்மையார் ஒரு நாள் மரித்துப்போனார். அவருடைய அடக்க ஆராதனையில் ஆயிரக்கணக்கான சீனமாணவர்கள் கலந்து கொண்டனர். இதை கவனித்த சபையின் பாதிரியாருக்கும் அந்த ஊராருக்கும் மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. பின்புதான் எல்லோருக்கும் புரிந்தது: கேத்தரின் அம்மையார் அவர்கள் தனக்கு கிடைத்த நேரங்களில் இயேசு கிறிஸ்துவை அநேகருக்கு போதித்து தேவனுடைய சித்தத்தை நிரைவேற்றினார் என்று.

கர்த்தருக்கு மிகவும் பிரியமானவர்களே! கடந்து போன ஆண்டை மறந்து விட்டு விடுங்கள். மலரும் புத்தாண்டிலேனும் நம்முடைய வேலை ஸ்தலங்களிலோ, தங்கி இருக்கும் இடங்களிலோ, நண்பர்களிடமோ, உறவினரிடமோ இயேசுவை அறியாதவர்களுக்கு (இரட்சிக்கப்படாதவர்களுக்கு), இயேசுவின் நற்செய்தியை நம் சாட்சியோடு அறிவித்து: கேத்தரின் அம்மையாரைப் போல் நம்மால் முடிந்ததை செய்யலாமே!

**அன்புள்ள சகோதரன்**
**ஆல்பிரட்**

---

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Jainy
Jessly
Joseph Prince
Lydia
Sharon Keerthana

உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள். _சக. 8:16

# சமர்ப்பணம் உமக்கே




அஹமதியில் அஹமதி தமிழ் திருச்சபையாம்
அன்பு நிறைந்த திருச்சபையாம்
ஆராதிக்கின்ற தமிழ் திருச்சபையாம்
ஆவியானவர் நிறைந்த திருச்சபையாம்
இன்பமான தமிழ் திருச்சபையாம்
இரக்கம் செய்யும் திருச்சபையாம்
உதவிடும் கரங்கொண்ட தமிழ் திருச்சபையாம்
உன்னதரை உயர்த்தும் திருச்சபையாம்
ஊழியர்களை கொண்ட தமிழ் திருச்சபையாம்
ஊக்கமாக ஜெபிக்கும் பங்காளர் கொண்டதிருச்சபையாம்
எழில் மிகு தமிழ் திருச்சபையாம்
எம்பெருமான் இயேசுவின் திருச்சபையாம்
ஏணிப்படியான தமிழ் திருச்சபையாம்
ஏக்கங்கள் தீர்க்கும் திருச்சபையாம்
ஐயம் போக்கும் தமிழ் திருச்சபையாம்
ஐயனையே போற்றும் திருச்சபையாம்
ஒற்றுமையை பேணிக்காக்கும் தமிழ் திருச்சபையாம்
ஒருவரையும் புறம்பே தள்ளாத திருச்சபையாம்
ஓடி ஓடி உழைத்திடும் தமிழ் திருச்சபையாம்
ஓய்வறியாது ஊழியம் செய்திடும் திருச்சபையாம்
ஔஷதம் நிறைந்த அஹமதி தமிழ் திருச்சபையாம்
ஔஷதமாய் குவைத்தில் வாழும் திருச்சபையாம்

இவ்வாண்டின் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உமக்கும் உம்மில் பெலன் கொள்ளும் சபையார்க்கும் பலுகிடவும் பெருகிடவும், சத்தியத்தின் அறிவை அறிந்து விடுதலை அடைந்திட இனிதான இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்களை சமர்ப்பணமாக்கும்...

**- சகோ. எபெநேசர் குடும்பம்**



# சர்க்கரை நோய்

**குவைத் பாட்டி**

**சர்க்கரை நோய்க்கு மாத்திரை வேண்டாம்: ஊசியும் வேண்டாம். சற்று முயற்சி செய்து பாருங்களேன்! ஒரு மாதத்தில் சர்க்கரை நோய் உங்களை விட்டு ஓடிவிடும்!!**

| | |
|---|---|
| வரக்கொத்தமல்லி | – அரை கிலோ |
| வெந்தயம் | – கால் கிலோ |

**தனித்தனியாக மேற்கண்டவற்றை பொன்னிறமாக வறுத்து: தனித்தனியாக பொடி செய்து இரண்டையும் நன்கு கலக்கவும். கலந்த பொடியில் இரண்டு டீ ஸ்பூன் பொடியை இரண்டு டம்ளர் (இருநூறு மில்லி) குடி நீரில் கொதிக்க வைத்து ஒரு டம்ளராக சுண்டக் காய்ச்சவும். பின்பு வடிகட்டி மூன்று வேளைக்கு சாப்பாட்டிற்கு முக்கால் மணி நேரத்திற்கு முன்பாக பருக வேண்டும். இந்த முக்கால் மணி நேரத்திற்கு வேறு எதையும் (குடிநீர் தவிர) உண்ணக் கூடாது. ஒரு மாதத்தில் சர்க்கரை நோய் உங்களை விட்டு ஓடிவிடும். இம்மருந்து சாப்பிடத் துவங்கும் முன்பாகவும் சாப்பிட்ட பின்பாகவும் உங்கள் சர்க்கரை நோயின் அளவை கணக்கிட்டுப் பாருங்கள். நிச்சம் மாற்றம் உண்டாகும்.**

**_ அஹமதி தமிழ் திருச்சபை**

மறக்கமுடியுமா!

# மாம(பு)னிதர் சார்லஸ் மீட்
## (1782 – 1873)

அந்நாட்களில் இங்கிலாந்தின் திருச்சபைகளில் மிஷனெரிப்பணி பற்றிய பேச்சாக இருந்தது. இந்தியா, சீன தேசங்களுக்கு மிஷனெரியாகச் சென்றுள்ளவர்களின் சாட்சிகள் மற்றும் கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ளும் கடிதங்கள், அத்தேசத்தின் கிளவ்செஸ்டர் மாநிலத்திலுள்ள பிரிஸ்டல் என்னும் ஊரில் ஒரு பக்தியான குடும்பத்தில் 1782–ம் வருடம் அக்டோபர் 1–ம் நாள் சார்லஸை தானும் மிஷனெரியாகத் தூர தேசம் சென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டுமென்கிற வாஞ்சையை உண்டாக்கியது.

டாக்டர் போக் நடத்திய கூட்டத்தில் ஒருநாள் வாலிபனான சார்லஸ் மீட் கலந்து கொண்டபோது மிஷனெரிப் பணிக்கு ஆண்டவர் தன்னை அழைப்பதை உணர்ந்து டாக்டர் போக்கிடம் தன்னை ஆண்டவர் இந்தியாவில் ஊழியம் செய்ய அழைப்பதை உணர்வதாகக் கூறினார். டாக்டர் போக், சார்லஸை உற்சாகப்படுத்தி காஸ்போர்ட் என்ற இடத்திலுள்ள வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து படிக்க உதவி செய்தார். பயிற்சி முடிந்ததும் 1816–ல் போதகராகவும் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

லண்டன் மிஷனெரிச் சங்கத்தாரால் ஏற்கெனவே இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு கடினமாக உழைத்து சுகவீனமாகி இங்கிலாந்துக்குத் திரும்பும் ரிங்கல்தௌபேயின் ஊழியங்களை ஏற்று நடத்தும் பணியைச் செய்ய சார்லஸ் மீட் பணிக்கப்பட்டார். ஊழி யபாரம் கொண்ட ஹன்ட் என்ற போதகரின் மகளை மணந்து 1816–ஆம் ஆண்டு இந்தியா பயணமானார். கப்பலில் சார்லஸுடன் சேர்ந்து ஒன்பது ஊழியர்கள் பயணம் செய்தனர். பயணிகளுக்கு சுவிசேஷம் அறிவித்து தினமும் நற்செய்திக் கூட்டங்களும் நடத்தி ஊழியம் செய்தனர். பயணிகளில் அநேகர் மனந்திரும்பினர். நான்கு மாதப் பயணத்திற்குப் பிறகு சென்னைத் துறைமுகத்தில் மறைதிரு லவ்லெஸ் தம்பதியர் இவர்களை வரவேற்றனர். சென்னைக்கு வந்தவுடன் சார்லஸ் மீட் சுகவீனமானார். இருந்தபோதிலும் தமிழ் படிப்பதிலும் ஊழியம் செய்வதிலும் நேரத்தை செலவழித்தார்.

1817–ஆம் ஆண்டில் தன் மனைவி குழந்தையோடு திருவிதாங்கூர் செல்ல சென்னையிலிருந்து கப்பலேறினார். பயணத்தில் திருமதி மீட் அதிக வியாதிப்பட்டு பினாங்க் என்ற இடம் சேரும்போது கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அந்நிய தேசத்தில் மிஷனெரிப்பணி செய்ய ஆவலாய்ப் புறப்பட்டு வந்த மீட் ஐயருக்கு இது தாங்கொண்ணா வேதனையாயிருந்தது. கிறிஸ்துவுக்குள் ஆறுதலடைந்து கலப்பையின் மேல் கை வைத்த பின்பு பின்னிட்டுப் பார்க்காது தன்னை அழைத்தவர் இறுதி வரை நடத்துவார் என்று விசுவாசித்து கைக்குழந்தையுடன் குளச்சல் துறைமுகத்திற்கு கப்பலேறி தனக்குக் குறிக்கப்பட்ட மைலாடி பணித்தளத்திற்குச் சென்று ஏழு சபைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

சுதந்திரத்திற்கு முன் இந்திய தேசத்தில் சிறப்பாக எண்ணப்பட்ட 56 நாடுகளில் திருவிதாங்கூரும் ஒன்று. ஆங்கிலேயரிடம் கப்பம் கட்டி சமாதானமாக ஆட்சி செய்தனர். உயர் ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற பிரிவினையால் சில மக்களைத் தீண்டத்தகாதவர்களாக எண்ணி அடிமைப் படுத்தியிருந்தனர். பெண்களை அதிகம் இழிவுப்படுத்தும் நாடாக காணப்பட்டது. கீழ் மக்களில் ஆண்கள் இடுப்புக்கு மேலும் முழங்காலுக்கும் கீழும் ஆடை அணியக்கூடாது. பெண்கள் சட்டை போடக்கூடாது. அதுமட்டுமல்ல இவர்கள் தலைவரி, தாலி வரி, வலை வரி, செக்கு வரி, ஏணிக்கு வரி, அரிவாளுக்கு வரி, குடுவைக்கு வரி என்று பலவகை வரிகளைச் செலுத்தும்படி நிர்ப்பந்தப் படுத்தப் பட்டிருந்தனர். ஏழை சபைகளும் பள்ளிக்கூடங்களுமே அன்றைய மக்களின் அறிவுக் கண்களைத் திறக்க உதவின.

சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை: மல். 2:6

சார்லஸ் மீட் ஐயர் கைக்குழந்தையுடன் திருச்சபைகளுக்குச் சென்று ஏழைக் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தினார். புதிய கிராமங்களிலும் சுவிசேஷப் பணியைத் துவக்கினார். சென்னையில் படித்த தமிழ் இதற்கு மிகவும் உதவியாக இருந்தது. ஆசிரியராகவும் உபதேசியராகவும் பணிசெய்ய ஊழியர்களைச் சந்தித்து தேவையான போதனைகள் பயிற்சிகள் கொடுத்து ஊக்குவித்தார். சிறுபிள்ளை கையிலிருந்தாலும் சுவிசேஷ வேலைக்கு அது தடையாக இல்லை. புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து ஆராதனைக் குழுக்களை நிறுவினார். அதுமட்டுமல்ல கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் நீதிபதியாகவும் பணிபுரிந்தார். சுவிசேக்ஷப்பணியின் மத்தியில் நீதிபதியாக பணியாற்றுவது மிகுந்த சிரமமாக இருந்தாலும் கிறிஸ்துவுக்குள் மகிமையாகவும் மிகுந்த ஜெபத்துடனும் வழக்குகளுக்கு தீர்ப்புக் கூறி மக்களின் பாராட்டையும் பெற்றார். அதுவரை கிறிஸ்தவர்களைத் துச்சமாக எண்ணியவர்கள் அதுமுதல் கிறிஸ்து மார்க்கத்துக்கு மகிப்புக்கொடுத்து தங்கள் கிராமத்திலும் வந்து கூட்டங்கள் நடத்த அழைப்புக்கொடுத்தனர். சுமார் 3000 ஆத்துமாக்கள் கிறிஸ்தவ மார்க்கத்தில் புதிதாக இணைந்தனர்.

1819–ம் ஆண்டு நாகர்கோவிலில் செமினெரி பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவினார் இதில் தமிழும் ஆங்கிலமும் வேதாகமும் கற்றுக் கொடுக்கப்பட்டது. 1825–ம் ஆண்டு மத்தியில் இரவு பகலாக உழைத்த சார்லஸ் மீட் ஐயர் சுகவீனப்பட்டு தஞ்சையில் தங்கி சிகிச்சை பெற்று ஓய்வெடுத்தார். சுகமானபிறகு கும்பகோணத்தில் தங்கி ஊழி யம் செய்தார். அங்கு அநேகர் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டனர். ஆலயமும், பள்ளிக்கூடமும் கட்டி எழுப்பினார். 1827–ல் நாகர்கோவிலில் 15 சபைகள், 7 உபதேசிமார், 1410 விசுவாசிகள், 36 பள்ளிக்கூடங்கள் இருந்தன. நெய்யூரில் 11 சபைகள், 16 உபதேசி யார், 1441 விசுவாசிகள், 21 பள்ளிகள் இருந்தன.

கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதனைக்குச் செல்வதால் அன்று வேலைக்கு வரமாட்டோம் என்றும் விக்கிரக கோவில் வேலைகளுக்கும் இனி தங்களால் வரமுடியாது என்றதினால் ராஜ்யத்தில் செல்வாக்கு பெற்ற முதலாளிகள் மிகவும் கோபமடைந்தனர். கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் படித்த வாலிபப் பெண் பிள்ளைகள் மிஷனெரிகளிடமிருந்து சட்டை தைத்து அணிந்து ஆராதனைக்குச் சென்றனர். பெண்கள் மேலாடை அணிய அனுமதிக்காத இந்தப் பகுதி யில் இது பெரும் சர்ச்சையை உண்டு பண்ணியது. இதற்குக் காரணம் கிறிஸ்தவ மிஷனெரிகளும் ஆலயமும் அவர்களது பள்ளிக்கூடங்களுந்தான் என்று முதலாளிகள் எரிச்சலடைந்தனர். பள்ளிகளையும் தேவாலயங்களையும் தீக்கொளுத்தினர். பெண்களின் மேலாடைகளை கிழித்து அவமானப்படுத்தினர். மிஷனெரிகளையும் உபதேசியர்களையும் ஆசிரியர்களையும் கண்ட இடங்களில் அடித்து சித்திரவதை செய்தனர். ஆராதனைக்கு வருவோரை தடுத்து அடித்து விரட்டி வேதபுத்தகங்களைக் கிழித்து எரித்தனர். இதனால் கிறிஸ்தவ மார்க்கத்தில் இரகசியமாக இருந்தவர்கள் வெளியரங்கமாகப் பலப்பட்டார்கள். கிறிஸ்தவர்களுக்கு விரோதமாகப் பொய் வழக்குகள் புனையப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். கிறிஸ்தவர்களின் உடைகள் சூறையாடப்பட்டன. கிறிஸ்தவப் பெண்கள் மானப்பங்கப்படுத்தப்பட்டனர். நிவாரண வழக்குகளில் மீட் ஐயர் தாமே சென்று வழக்காடி கிறிஸ்தவர்களை விடுவித்தார். நெய்யூரில் 1831–ம் ஆண்டு ஆலயம் கட்டப்பட்டது. போர்டிங் பள்ளிக்கூடமும் நிறுவப்பட்டது. மீட் ஐயருடைய 3 குமாரர்கள் 1832, 1836, 1838–ம் வருடங்களில் ஒன்றன்பின் ஒன்றாக மரித்தனர். இது தாங்க முடியாத துக்கத்தைக் கொடுத்தாலும் ஊழியத்தை தொடர்ந்து செய்தார். தேவ கிருபையால் பெலன் பெற்றார்.

ஊழியத்திற்கென்று புறப்பட்டு வந்து சுமார் 19 வருடங்களுக்குப்பின் வேலைப் பளுவினால் சோர்வுற்று சிகிச்சைக்காக இங்கிலாந்தில் எங்கு சென்றாலும் இந்திய ஊழியத்திற்கு ஆதரவு சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். டாக்டர் ராம்சே என்பவரின் துணையைக் கொண்டு மருத்துவ ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு வியாதியஸ்தர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மருத்துவ உதவியாளர் பயிற்சியும் தொடங்கப்பட்டது. 1840 –ம் ஆண்டில் 6867 கிறிஸ்தவர்களும் 100 உபதேசியார்களும், 2703 மாணவர்களும், 18 வேதாகம மாணவர்களும் இருந்தனர். தனது இறுதி நாட்களில் அநாதை பள்ளிகளுக்கும் அச்சுக்கூடத்திற்கும் பொறுப்பாக திருவனந்தபுரத்தில் பணிபுரிந்தார். தனது 85 –ம் வயதில் 1873 –ம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். 1818 –ம் ஆண்டு குளச்சல் துறைமுகத்தில் கையில் குழந்தையுடன் வந்திறங்கிய மீட் ஐயர் தமது 35 வருட உழைப்பால் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை நாகர்கோவிலில் சம்பாதித்தார். இன்று உலகம் முழுவதிலும் இந்த ஆத்துமாக்கள் ஊழியர்களாகப் புறப்பட்டுச்சென்று கிறிஸ்துவின் வருகைக்கு அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி வருகின்றனர்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

---

**இன்றைய தகவல்**

## C. F. L பல்புகள்





சி. எ.ஃப். எல் பல்புகள் கைத்தவறி விழுந்து உடைந்துவிட்டால் உடனே அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது. ஏனென்றால் இந்த பல்புகளுக்குள் உள்ள மெர்க்குரி திரவமானது ஆர்சனிக் மற்றும் துத்தநாகத்தைவிட அதிக விஷத்தன்மையுள்ளது. இந்த விஷத்தை நுகர்ந்தாலோ அல்லது சருமத்தில் பட்டாலோ மைக்ரேன் தலைவலி, மூளை பாதிப்பு, உடல் அசைவுகள் பாதிக்கப்பட்டு நிலை தடுமாறுதல் போன்றவை ஏற்படுமாம். அலர்ஜி பிரச்சனை உள்ளவர்களுக்கு சரும பாதிப்புகளும் ஏற்படுமாம்.

சி. எ.ஃப். எல் பல்புகள் உடைந்துவிட்டால் நாம் என்ன செய்யவேண்டுமென்றால், உடனே அந்த அறையிலிருந்து வெளியேறி விட வேண்டும். அந்த நெடி மூக்கில் ஏறக்கூடாது. பதினைந்து நிமிடங்கள் ஆனபின் அப்புறப்படுத்தலாம். நொருங்கிக் கிடக்கும் கண்ணாடித் துகள்கள் காலில் படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். வேக்கூம் கிளீனரால் சுத்தப்படுத்தக் கூடாது. வேக்கூம் கிளீனரால் உறிஞ்சப்பட்டால் அது உள்ளே ஒட்டிக் கொள்ளும். அதை திரும்ப உபயோகிக்கும் போது மெர்க்குரி துகள்கள் மற்ற அறைகளுக்கும் பரவி மிக மோசமான உடல் உபாதைகளை ஏற்படுத்தும். கைகளில் ரப்பர் கிளவுஸ் போட்டுக் கொண்டு சாதாரண துடைப்பத்தால் சுத்தப்படுத்தலாம். உடைந்த துகள்கள் மற்றும் திரவத்தை ஒரு பிளாஸ்டிக் பையில் சேகரித்து சீல் செய்து சாதாரண குப்பைத் தொட்டியில் போடலாம். கார்ப்பரேஷன் ரீசைக்கிளிங் பின்னில் கொண்டு சேர்த்தால் அவர்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்திவிடுவார்கள். முடிந்தவரை மற்றவருக்கும் இச்செய்தியை தெரிவிக்கவும்.

**– அஹமதி தமிழ் திருச்சபை**

அந்த வார்த்தை மாம்சமாகி; கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்; நமக்குள்ளே வாசம்பண்ணினார். _யோவா. 1:14

# QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

**JUMBLES:-**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | I | N | S | R | F | (O) | T | R | B |
| 2) | D | D | M | E | E | E | E | (R) | |
| 3) | T | F | W | U | H | L | (A) | C | |
| 4) | I | P | E | A | C | E | (N) | T | |
| 5) | E | E | A | (N) | H | V | | | |
| 6) | E | Y | (M) | S | O | T | T | N | I |
| 7) | (S) | P | W | H | (R) | I | O | | |
| 8) | L | (I) | S | E | S | (G) | N | B | |
| 9) | F | H | L | F | (T) | A | U | I | |
| 10) | ○ | ○ | ○ | ○ | ○ | ○ | ○ | | ○ ○ ○ ○ |

Using the letters inside circles, from this word. God will give this to he who overcomes and keeps His works until the end.

**Note:- ANSWERS can be taken from Revelation chapters 1 to 5. Submit your answers to the Sunday School Teachers on or before 24.01.2014.**

## நம்பிக்கை




எப்படியிருக்குமோ இந்த புது வருடம்?
என கலங்கி மனம் குழம்பிட வேண்டாம்
இதுவரை நடத்தின இம்மானுவேலர்
இவ்வருடமும் தாங்கி நடத்திடுவார்.

இயேசுவை நோக்கிப் பார்த்திடு கண்ணீரின் சூழ்நிலையில்
இயேசு பேசுவதைக் கேட்டிடு தினம் வேதம் வாசிக்கையில்
இயேசுவோடு நிதம் பேசிடு எப்போதும் இடைவிடாமல்
இயேசுவோடு நடந்திடு தனிமையில் நீ தவிக்கையில்.

மனிதரிடம் கண்ணீர் சிந்துவதால் உனக்கு பரிதாபம் கிடைக்கும்
பரமனிடம் கண்ணீர் சிந்துவதால் உனக்கு பரிகாரம் கிடைக்கும்
வாழ வழி என்ன என்று ஏங்கி நிற்காதே
வழி நானே என்ற இயேசுவிடம் வருவதற்கு தாமதிக்காதே.

கடவுளை நம்பி பிழைக்கும் காக்கை குஞ்சுகளைப் பார்
காட்டிலே பூத்துக்குலுங்கும் மலர் வகைகளைப் பார்
இவைகளைவிட நீ விசேஷித்தவன் அல்லவோ!
இறைவனின் சாயலில் நீ படைக்கப்பட்டிருப்பதால்.

இரவு நிலைத்திருப்பதில்லை விடியல் நிச்சயம் வரும்
எப்போதும் புயல் வீசாது அமைதி திரும்ப வரும்
எதிர்பார்த்துக் காத்திரு இயேசுவின் பாதத்தில்
நீ விரும்பும் மாற்றங்கள் நிச்சயம் கனிந்து வரும்.

**- ஸ்டாலின்**

நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள்; அவன் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தான். யோவா. 5:33

# பின் செல்லும் ஆடுகள்

ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப்பின் செல்கிறது (யோவா.10:4). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு ஆடு மேய்ப்பர்களுக்கு முதலாவது அறிவிக்கப்பட்டது நாம் அறிந்ததே. இயேசுவும் தன்னை மேய்ப்பருக்கு ஒப்பிட்டு பேசுகிறார் "நானே நல்ல மேய்ப்பன்" (யோவா. 10:11). தாவீது சங். 23:1 –ல் "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்" என்றும் சொல்கிறார். இந்த இயேசுவை பின் செல்ல வேண்டுமென்றால் நாம் அவருடைய சத்தத்தை அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். நமக்கும் அவருக்கும் உள்ள உறவு எப்படி இருக்க வேண்டும் என்றால்....


**C1. நெருங்கிய உறவு (Close Relationship):–** நமக்கு ஆண்டவராகிய இயேசுவோடு நெருங்கிய உறவு இருந்தால் நாம் அவருடைய சத்தத்தை அறிய முடியும். தகப்பனை விட்டு தூரமாய் சென்ற மகன் பாவத்தில் வீழ்ந்தான்: அதனால் பெரும் அவதிப்பட்டான். உன்னோடும் என்னோடும் உறவு கொள்ள இயேசு மனிதனாய் பூமியில் அவதரித்தார். எவ்வளவு தூரம் நாம் இயேசுவோடு நெருங்கி ஜீவிக்க வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார் "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20). இயேசு கிறிஸ்து உனக்குள் இருக்க வேண்டும். அதற்காகத்தான் இயேசு பூமியில் மனிதனாக வந்தார்.

**C2. இடைவிடா உறவு (Continuous Relationship):–** ஒரு மனிதனோடு ஒவ்வொரு நாளும் பேசிக் கொண்டிருந்தால் அவரது குரலை தொலைபேசியில் சுலபமாக கண்டு பிடித்துவிடலாம். அறிவில் குறைந்த ஆடுகள் கூட தன் மேய்ப்பனின் குரலை அடையாளம் கண்டு கொள்கிறது. காரணம் அவனது குரலை தினமும் அந்த ஆடு கேட்பதால் அது புரிந்து கொள்கிறது. நமக்கும் இயேசுவோடு இடைவிடாமல் உறவு இருக்கும் போது நாம் அவருடைய சத்தத்தை அறிந்து கொள்ள முடியும். சரியான பாதையில், நித்திய ஜீவனுக்கேதுவான பாதையில் நாமும் முன்னேறிச் செல்ல முடியும். ஆண்டவராகிய இயேசு நமக்காக தன் ஜீவனையே கொடுத்த நல்ல மேய்ப்பன் (யோவா. 10:11). **"நாம் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளினார்"** (யோவா. 3:16) என்றும் வேதம் நமக்கு விளங்கப்பண்ணுகிறது.

**C3. முழுமையான உறவு (Complete Relationship):–** "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது" (மத். 6:24). இரண்டு மேய்ப்பர்களுக்கு செவி கொடுத்தால் ஆடுகளின் பாடு திண்டாட்டம்தான் என்பது நாம் அறிந்ததே. "ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன்" (யோவா. 10:16) என்ற வசனத்தின்படி ஆண்டவராகிய இயேசு ஒருவரே நமக்கு மேய்ப்பனாய் இருக்கும்போது நம் வாழ்வில் குழப்பங்கள் வராது: குறைவுகள் ஏற்படாது. ஏதேன் தோட்டத்தில் கொள்ளைக்காரனுடைய சத்தத்திற்கு செவி கொடுத்ததால் ஆதாம் ஏவாளின் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்தது. அவர்களோ நல்ல மேய்ப்பனின் குரலை கேட்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள். தன்னையே கொடுத்த கிறிஸ்துவுக்கு உன்னை முழுமையாய் ஒப்புக் கொடுத்துவிடு. உலக பெருமைகளை இச்சைகளை குப்பையென்று எறிந்துவிடு. ஆண்டவரின் சத்தத்தை என்றென்றும் அறிந்திடு. அதன்படியே என்றென்றும் நடந்திடு. பிறக்கும் ஆண்டில் நன்மையும் கிருபையும் உன்னைத் தொடருமே! எனது குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

நான் என் சுயமாய் வரவில்லை; என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். யோவா. 7:28



## ஒரு ஊரில் என்னைத் தெரியுமா!

முதியவர் ஒருவருக்கு மிகுந்த பசி எடுத்தது. ஏதாவது சாப்பிடலாம் என்று எண்ணி ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தார். அங்கு உணவு பரிமாறும் சர்வரை பார்த்தார்: பார்த்ததும் பணிவன்புடன், தம்பி சாப்பிட என்ன இருக்கிறது? என்று கேட்டார் தன் முதியவர் தோரணையில். திரும்பி பார்த்த சர்வர் மத்தியான வேளையில் என்ன இருக்கும்! சாப்பாடு (சோறு) தான் இருக்கும். பெருசு சாப்பாடு வைக்கட்டுமா! என்று இளவயதின் முறுக்கோடு திருப்பிக் கேட்டார்.

மீண்டும் முதியவர் தன் சாந்தமான குரலில், சர்வர் தம்பி! சாப்பாடு என்ன விலை என்று கேட்டார். உடனே சர்வர் பெரியவரை அவர் பாதம் முதல் தலை முடிவரை ஏளனமாய் எண்ணியபடி நோக்கினார்: தொடர்ந்தார்... பெருசு! சுாப்பாடு 50 ரூபாய் என்று பதில் பொன்னார். முதியவர் உடனே சற்று தளர்ந்த தன் கரங்களால் திருடர்களுக்கு பயந்து மடியில் மறைத்து வைத்திருந்த சுருக்கு பையை வெளியில் எடுத்தார். அந்த பையும் அவருடைய தோற்றத்தை ஒத்தது போலவே சற்று பழைமை யாகவே இருந்தது. பையின் சுருக்குக் கண்ணியை மெதுவாக அகலப்படுத்தி, தன் கையை அதற்குள் நுழைத்து அதற்குள் அடங்கிக் கிடந்த சில்லரை நோட்டுகளை சப்தம் வெளியே வராமல் மெதுவாக எண்ணினார்: எண்ணி முடித்து சுருக்குக் கண்ணியையும் சுருக்கி தன் சுவாசத்தையும் சற்று இழுத்துவிட்டார்.

மீண்டும் சர்வரின் அருகில் சென்று மெதுவான குரலில், சர்வர் தம்பி! கொஞ்சம் குறைந்த சாப்பாடு இல்லையா! என்று தன் விவாதத்தை முன் வைத்தார். மீண்டும் பரிதா பமாய் சர்வர் அந்த பெரியவரை பார்த்துவிட்டு, பெருசு! தையிர் இல்லாம சாப்பிடுரியா! 45 ரூபாய் தான் ஆகும் என்றார். மலர்ந்த முகத்தோடு தன் தலையை மெதுவாக அசைத்து தன் சம்மதத்தை தெரிவித்துவிட்டு பெரியவர் சாப்பிட உட்கார்ந்தார்.

தன் வயதிற்கு ஏற்றபடி மெதுவாய் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து விடைபெறும் முன்பாக சர்வர் வழக்கத்தின்படி ஒரு சிறு தட்டின் மீது சாப்பாட்டின் விலைப்பட்டியலை வைத்துக் கொடுத்தார். பெரியவர் தான் நம்பி இருந்த சுருக்குப் பையை மீண்டும் வெளியில் எடுத்தார். சுருக்குக் கண்ணியை விரித்தார். அதனுள் இருந்த எல்லா நோட்டுகளையும் எடுத்து மொத்தமாக சர்வர் கொண்டுவந்த தட்டின் மீது வைத்தார். தட்டின் மீது வைக்கப்பட்டிருந்த நோட்டுகளை சர்வர் எண்ணிப்பார்த்த பொழுது அதில் 50 ரூபாய் இருந்தது.

எரிச்சலடைந்த சர்வர் முதலிலே இந்த ரூபாய் நோட்டுகளை என்னிடம் எண்ணும்படி தந்திருந்தால் முழு சாப்பாடும் சாப்பிட்டிருக்கலாமே! என்று சொல்லி மீதமுள்ள 5 ரூபாயை பெரியவரிடம் திருப்பிக் கொடுத்தார். தம்பி! அந்த 5 ரூபாயை நீயே வைத்துக் கொள். உனக்கு தரும்படி என்னிடம் வேறு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு அங்கிருந்து பறந்து (நடந்து – கடந்து) சென்றார். சர்வரின் திறந்த வாய் அப்படியே சில நொடிகள் இருந்தது. **"மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்: மனுஷன் முகத்தைப் பார்ப்பான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்"** (1சாமு. 16:7). நாம் யாரையும் அவருடைய தோற்றத்தை வைத்து எடைபோட வேண்டாம். பின்பு நாமே நாணமடைய வேண்டிய சூழ்நிலை ஏற்படலாமே!

**கர்த்தரின் கிருபையில்**
**லிடியா ஆ. தாஸ்**

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்: _யோவா. 14:6












# சபையின் 37 -வது ஆண்டு விழாவில் சில நிகழ்வுகள்








**Private Circulation only**